# முன்னுரை

புகழ்கள் அனைத்தும் எல்லாவற்றையும் படைத்து பரிபாலனம் செய்யும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும்!

ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் மீது அவர்களது சங்கைமிகு ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக !

மார்க்கத்தில் கட்டாயமாக கற்கப்பட வேண்டிய கல்வியை தேடிக்கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் பெருங் கடமையாகும். என்பதாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தன்னையும், தன் குடும்பத்தையும் கொடூரமான நரக வேதனையிலிருந்து பாதுகாப்பதானது பருவமடைந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றேயாக வேண்டிய கல்வியை கற்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனேனில் மார்க்க கடமைகளை சரிவர அறிந்து அதனை நிறைவேற்றாமலும், மார்க்கத்தில் தடைவிதிக்கப்பட்டவைகளை அறிந்து அவைகளை தவிர்ந்து கொள்ளாமலும் ஒருவர் தக்வாவுள்ளவராக ஆக முடியாது.

நம் மீது விதிக்கப்பட்ட கடமைகளையும், நமக்கு விலக்கப்பட்டுள்ள ஹறாம்களையும் அறிய ஓரே வழி கற்றுக் தேர்ந்த அறிஞர்களிடம் சென்று இஸ்லாமிய கல்வி ஞானம் பெறுவதேயாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு, ஜம்இய்யதுல் மʿாரிஉல் ஹைரிய்யஹ் அல் இஸ்லாமிய்யஹ்விலே இருக்கும் இஸ்லாமிய பாடங்கள், மற்றும் ஆய்வுகளுக்கான குழு பல நூல்களை ஆய்வு செய்த போது அவைகள் பூரணமான இஸ்லாமிய தகவல்களை கொண்டதாகவும், சரியான தகவல்களை கொண்டதாகவும் காணப்படாததால். சிறார்களின் வினைத்திறனுக் கேட்ப வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் இலகுவானதான நூற்களை தயாரித்தலில் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுப்பட்டனர். அதன் பிரதிபலனாக அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என்ற அற்புதமான நூலை தயாரித்து வெளியிட்டுள்ளனர். இனிமையான சொற்களை கொண்டும், புரிந்துகொள்ள இலகுவான வாக்கிய அமைப்பை

கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த நூற்களை ஒரு பிள்ளை முறையாக கற்கும் போது அப்பிள்ளை இஸ்லாமிய மார்க்கத்தில் அறிந்திருக்கு வேண்டிய கடமைகளை, நற்குணங்களை அறிந்த ஒரு பிள்ளையாக ஆகிவிடும்.

5 பாகங்களைக் கொண்ட இந்த நூலில் ஒவ்வொரு பாகமும் 3 பிரிவுகளை கொண்டுள்ளது. முதல் பிரிவானது இஸ்லாமிய கோட்பாடுகளை விபரிப்பதாகவும், இரண்டாம் பகுதி இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் முறைகளை விபரிப்பதாகவும், மூன்றாவது பிரிவு இஸ்லாம் கற்றுத் தரும் நற்குணங்களை விபரிப்பதாகவும் அமைந்துள்ளது.

அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என பெயரிடப்பட்ட இந்நூல் தாங்களது பிள்ளைகள் இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற வழிவருக்கமெனவும், தாங்களது பிள்ளை நேர்த்தியான நல்லொழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப உதவி செய்யுமெனவும் நம்புகிறோம்.

# அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ்

# பாகம் - 01

# فصل العقائد

## இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்

பாடம் : 1 　　　　1 الدرس

## أنا مسلم صغير

## நான் ஒரு சிறிய முஸ்லிம்

أَحب الله خالقي

நான் என்னைப் படைத்த அல்லாஹ்வை நேசிக்கின்றேன்.

وأحب محمدا ﷺ نبيي

நான் எனது நபி முஹம்மத் ﷺ அவர்களை நேசிக்கின்றேன்.

وأحب القرآن كتابي

நான் எனது வேதமாகிய அல்-குர்ஆனை நேசிக்கின்றேன்.

وأحب الكعبة قبلتي

நான் எனது கிப்லாவாகிய க.ஃ.பாவை நேசிக்கின்றேன்.

وأحب الإسلام ديني

நான் எனது மார்க்கமாகிய இஸ்லாத்தை நேசிக்கின்றேன்.

أشهد أن لا إله الا الله

உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் அறிந்து உள்ளத்தினால் உண்மைப்படுத்தி உறுதி கொண்டு நாவினால் மொழிகின்றேன்.

وأشهد أن محمدا رسول الله

நபி முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நான் அறிந்து உள்ளத்தினால் உண்மைப்படுத்தி உறுதி கொண்டு நாவினால் மொழிகின்றேன்.

للحفظ غيبا

மனனம்  இடுவதற்காக

رضيت بالله ربا وبالإسلام دينا وبمحمد نبيا

பாடம் : 2 الدرس 2

## أعظم أمور الإسلام

## இஸ்லாத்தின் மிக முக்கியமான அம்சங்கள்

قال رسول الله ﷺ بني الإسلام على خمس :

1. شهادة أن لا إله الا الله وأن محمدا رسول الله
2. وإقام الصلاة
3. وإيتاء الزكاة
4. وصوم رمضان
5. وحج البيت

رواه مسلم

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :

**“இஸ்லாம் ஐந்து விடயங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது.**

**1. உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே என்றும் முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உள்ளத்தினால் உண்மைபடுத்தி உறுதி கொண்டு நாவினால் மொழிவதாகும்.**

**02. தொழுகையை நிறைவேற்றுவதாகும்.**

**03. ஸகாத் கொடுப்பதாகும்.**

**04. றமழான் மாதத்தில் நோன்பு நோற்பதாகும்.**

**05. க:.பாவை ஹஜ் செய்வதற்கு சக்தியுள்ளவர் ஹஜ் செய்வதாகும்.”**

(அறிவித்தவர் - இமாம் முஸ்லிம் )

للحفظ غيبا

மனனம்  இடுவதற்காக

اللهم علمنا ما ينفعنا وانفعنا بما علمتنا وزدنا علما

பாடம் : 3 الدرس 3

## الله واحد لا شريك له

## அல்லாஹ் இணையின்றி தனித்தவன்

## அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை

الله موجود بلا بداية ولا نهاية

அல்லாஹ் எவ்வித ஆரம்பமும் முடிவுமின்றி உள்ளவன்.

الله ليس له زوجة

அவனுக்கு மனைவி இல்லை.

الله ليس له ابن ولا بنت

அவனுக்கு ஆண் பிள்ளையுமில்லை, பெண் பிள்ளையுமில்லை.

الله ليس له أب ولا أم

அவனுக்கு தாயுமில்லை, தந்தையுமில்லை.

الله ليس له أخ ولا أخت

அவனுக்கு சகோதரனுமில்லை, சகோதரியுமில்லை.

الله لا يشبهنا

அல்லாஹ் எங்களுக்கு ஒப்பாகமாட்டான். (அவன் எங்களைப் போன்றவன் அல்ல)

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

لا إله الا الله وحده لا شريك له لا حول ولا قوة إلا بالله

الدرس 4

பாடம் : 4

## الله رب كل شيء

## அல்லாஹ் அனைத்தையும் படைத்துப் பரிபாலிப்பவன்

الله ربي ورب أمي وأبي

அல்லாஹ்தான் என்னையும் எனது தாய், தந்தையினரையும் படைத்து பரிபாலிப்பவன்.

الله رب أخي وأختي

அல்லாஹ்தான் எனது சகோதர, சகோதரியை படைத்து பரிபாலிப்பவன்.

الله رب أستاذي ورفاقي

அல்லாஹ்தான் எனக்கு கல்வியைப் போதிக்கும் ஆசானையும், எனது நண்பர்களையும் படைத்துப் பரிபாலிப்பவன்.

الله رب السموات والأرض

அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் படைத்து பரிபாலிப்பவன்.

الله رب كل شيء

அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்து பரிபாலிப்பவன்.

الله رب العالمين

அல்லாஹ்தான் அகிலத்தார் அனைவரையும் படைத்து பரிபாலிப்பவன்.

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

أنا مسلم أحب الله كثيرا الله الله ربي لا أشرك به شيئا

நான் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை அதிகமாக நேசிக்கின்றேன். அவன் எனது றப்பு. அவனுக்கு எதையும் நான் இணையாக்கமாட்டேன்.

பாடம் : 5 الدرس : 5

## الله خالق كل شيء

## அனைத்து வஸ்துக்களையும் படைத்தவன் அல்லாஹ்

الله خلق آدم من ماء وتراب

அல்லாஹ் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நீர் மற்றும் மண்ணின் மூலம் படைத்தான்.

الله خلق الملائكة من نور

அல்லாஹ், மலக்குமார்களை ஒளியின் மூலம் படைத்தான்.

الله خلق الجن من نار

அல்லாஹ், ஜின்களை நெருப்பின் மூலம் படைத்தான்.

الله خلق السموات وجعلها مسكنا للملا ئكة

அல்லாஹ், வானங்களை படைத்து அவற்றை மலக்குகளுக்குரிய இருப்பிடமாக ஆக்கினான்.

الله خلق الأرض وجعلها مسكنا للإنسان والجن والبهائم

அல்லாஹ், பூமியை படைத்து அதனை மனிதன், ஜின்கள் மற்றும் கால்நடைகளுக்குரிய இருப்பிடமாக ஆக்கினான்.

قال الله تعالى

الله خالق كل شئ

( سورة الرعد : ءاية 16 )

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

***"அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்"***

***(அத்தியாயம் : அற்-ற.ஃது வசனம் : 16 )***

கேள்விகள் - أسئلة

1- مم خلق آدم ؟

1. நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் எதன் மூலம் படைத்தான் ?

2- مم خلق الله الملائكة ؟

02. மலக்குமார்களை அல்லாஹ் எதன் மூலம் படைத்தான் ?

3- مم خلق الله الجن ؟

03. ஜின்களை அல்லாஹ் எதன் மூலம் படைத்தான் ?

பாடம் : 6 الدرس :6

## الله لا يشبه شيئا

## அல்லாஹ் எதற்கும் ஒப்பாகமாட்டான்

قال الله تعالى

(ليس كمثله شئ)

سورة الشورى ءاية 11

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

***"அல்லாஹ் எந்த ஒன்றுக்கும் எவ்விதத்திலும் ஒப்பாகமாட்டான்."***

***( அத்தியாயம் : அஷ்-ஷூறா வசனம் : 11 )***

الله تعالى لا يشبه الملا ئكة

அல்லாஹ் மலக்குமார்களுக்கு ஒப்பாகமாட்டான்.

الله لا يشبه البشر

அல்லாஹ் மனிதர்களுக்கு ஒப்பாகமாட்டான்.

الله تعالى لا شكل له

அல்லாஹ்வுக்கு எவ்வித வடிவமும் இல்லை.

الله تعالى لا لون له

அல்லாஹ்வுக்கு எவ்வித வர்ணமும் இல்லை.

الله تعالى لا يشبه شيئا من المخلوقات

அல்லாஹ் படைப்புகளில் எந்த ஒன்றுக்கும் ஒப்பாகமாட்டான்.

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

قال الإمام ذو النون المصري : مهما تصورت ببالك فالله لا يشبه ذلك

இமாம் துன் நூன் அல்-மிஸ்ரீ ரழியல்லாஹுஂ அன்ஹுஂ அவர்கள் கூறியுள்ளார்கள் :

**“ நீ உனது உள்ளத்தினால் அல்லாஹ்வை எவ்வாறெல்லாம் கற்பனை செய்தாலும் அவன் அதற்கும் ஒப்பாகமாட்டான். ”**

பாடம் : 7 الدرس :7

## لا إله إلا الله

## உண்மையில் வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை

الله حي لا يموت

அல்லாஹ் மரணமில்லாதவன்.

الله قادر على كل شيئ

அல்லாஹ் அனைத்து வஸ்துக்கள் மீதும் வல்லமை உள்ளவன்.

الله مالك كل شيئ

அல்லாஹ் அனைத்து வஸ்துக்களையும் ஆட்சிசெய்பவன்.
(உரிமையாளன்)

الله عالم بكل شيئ

அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்.

الله لايخفى عليه شيئ

அல்லாஹ்வுக்கு எதுவும் மறைவானதல்ல.

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

حسبي الله لا إله إلا هو عليه توكلت وهو رب العرش العظيم

الدرس 8

பாடம் : 8

## الله ليس جسما

## அல்லாஹ் உடல் தன்மை கொண்டவனல்ல

الله يرى بلا حدقة

அல்லாஹ் கண் விழிகளின்றிப் பார்க்கின்றான்.

الله يسمع بلا أذن

அல்லாஹ் காதுகளின்றிக் கேட்கின்றான்.

الله يتكلم بلا لسان ولا شفتين

அல்லாஹ் நாவோ, இரு உதடுகளோ இன்றி பேசுகின்றான்.

الله ليس له أعضاء ولا جوارح

அல்லாஹ் உடலுறுப்புகளின்றி உள்ளான்.

الله عالم بلا معلم

அல்லாஹ் ஆசானின்றி அனைத்தையும் நன்கறிந்தவன்.

الله لا يشبه شيئا

அல்லாஹ் எதற்கும் ஒப்பாகமாட்டான்.

ولا يشبهه شيئ

எதுவும் அவனுக்கு ஒப்பாகமாட்டாது.

<u>للحفظ غيبا</u>

மனனம்  இடுவதற்காக

سبحان الله وبحمده لا قوة إلا با لله

الدرس 9

பாடம் : 9

## الله موجود بلا مكان

## அல்லாஹ் இடமின்றி உள்ளவன்

الله لا يشبه شيئا

அல்லாஹ் எதற்கும் ஒப்பாகமாட்டான்.

الله لا يحتاج إلى شيئ

அல்லாஹ் எதன் பக்கமும் தேவைகாணமாட்டான்.

الله خلق السموات فلا يسكن السماء

அல்லாஹ் வானங்களை படைத்தான். எனவே அவற்றில் குடியிருக்க மாட்டான்.

الله خلق الأرضين فلا يسكن الأرض

அல்லாஹ் பூமிகளை படைத்தான். எனவே அவன் அதில் குடியிருக்க மாட்டான்.

الله لا يحتاج إلى المكان

அல்லாஹ் இடத்தின் பக்கம் தேவைகாணமாட்டான்.

الله موجود بلا مكان

அல்லாஹ் இடமின்றி உள்ளவன்.

<u>للحفظ غيبا</u>

மனனம் இடுவதற்காக

قال علي رضي الله عنه :

كان الله ولامكان وهو الآن على ما عليه كان

அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

**“அல்லாஹ் இடங்களை படைப்பதற்கு முன்னர் இடமின்றி உள்ளவன். அதே போன்று அவன் இடங்களைப் படைத்ததன் பின்பும் இடமின்றியே உள்ளவன்.”**

الدرس 10

பாடம் : 10

## سورة الإخلاص

## بسم الله الرحمان الرحيم

## சூறா அல்-இஹ்லாஸ்

قل هو الله أحد (1)

அல்லாஹ் இணையின்றி தனித்தவன். அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை.

الله الصمد (2)

அனைத்து படைப்புகளும் அல்லாஹ்வின் உதவியின் பால் தேவைகாண்கின்றன. ஆவன் எந்த படைப்பின் பக்கமும் தேவைகாணமாட்டான்.

لم يلد ولم يولد (3)

அவனிலிருந்து எதுவும் பிரியவுமில்லை. ஆவன் வேறொன்றிலிருந்து பிரிந்தவனுமில்லை.

ولم يكن له كفوا أحد (4)

நிச்சயமாக அவனுக்கு ஒப்புவமைகள் இல்லை. என நபி ﷺ அவர்கள் கூறுவீராக!

الشرح : قل هو الله أحد (1) الله واحد لا شريك له

الله الصمد (2) كل شيئ يحتاج إلى الله

والله لا يحتاج إلى شيئ

لم يلد (3) ليس له أولاد وليس له أصلا لغيره

ولم يولد ليس له أب ولا ام وليس فرعا من غيره

ولم يكن له كفوا أحد(4) ليس له مثيل ولا شبيه

أسئلة

கேள்விகள்

பின்வரக்கூடிய வசனங்களின் கருத்து யாது ?

1_ ما معنى قل هو الله أحد

2- ما معنى لم يلد

3- ما معنى ولم يكن له كفوا أحد

الدرس 11

பாடம் : 11

## أفضل الأعمال

## மிகச் சிறந்த அமல்

قال رسول الله ﷺ أفضل الأعمال إيمان بالله وسوله

رواه البخاري

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :

**“மிகச்சிறந்த அமல் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் சரியான முறையில் ஈமான் (நம்பிக்கை) கொள்வதாகும்.”**

( அறிவித்தவர் : இமாம் அல்-புஹாரீ)

قال رسول الله ﷺ

((أفضل ما قلت أنا والنبيون من قبلي لا إله إلا الله ))

رواه الترمذي

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :

“நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய வார்த்தைகளில் மிகச்சிறந்தது **لا إله إلا الله** ( **உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. )** என்பதாகும்.”

(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ)

دعاء

اللهم اشرح لي صدري ويسر لي أمري وثبتني على الإيمان

الدرس 12

பாடம் : 12

**الإسلام ديني**

**இஸ்லாம் எனது மார்க்கம்**

قال الله تعالى (إن الدين عند الله الإسلام)

(سورة ءال عمران ءاية :19)

**அல்லாஹ் அல்-குர்ஆனில் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

***" நிச்சயமாக அல்லாஹ்வினால் பொருந்திக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும். "***

***( அத்தியாயம் : ஆல இம்ரான் வசனம் : 19 )***

الإسلام هو الدين الصحيح

இஸ்லாம் தான் உன்மையான மார்க்கமாகும்.

الإسلام دين محمد وعيسى وموسى عليهم السلام

இஸ்லாம் என்பது நபி முஹம்மத் ﷺ அவர்களினதும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களினதும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களினதும் மார்க்கமாகும்.

الإسلام دين جميع الأنبياء

இஸ்லாம்தான் அனைத்து நபிமார்களின் மார்க்கமாகும்.

المؤمنون لهم الجنة والكافرون لهم النار

மு.ஃ.மின்களுக்கு சுவர்க்கமும், காபிர்களுக்கு நரகமும் இருக்கின்றது.

أنا مسلم صغير وأحب دين الإسلام

நான் ஒரு சிறிய முஸ்லிம். நான் இஸ்லாத்தை நேசிக்கின்றேன்.

دعاء

اللهم اجعلني من عبادك الصالحين

وأدخلني الجنة مع الأولين

الدرس 13

பாடம் : 13

## الإسلام دين الأنبياء

## இஸ்லாம் நபிமார்களின் மார்க்கமாகும்

كل الأنبياء مسلمون

அனைத்து நபிமார்களும் முஸ்லிம்களாவார்கள்.

كل الأنبياء قالوا لا إله إلا الله

அனைத்து நபிமார்களும் **لا إله إلا الله** ( **உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை.)** என்ற கலிமாவை கூறியுள்ளார்கள்.

سيدنا آدم عليه السلام نبي مسلم

وهو أول الأنبياء

எங்கள் தலைவர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு முஸ்லிமான நபியாவார்கள். மேலும் அவர்கள் நபிமார்களில் முதன்மையானவருமாவார்கள்.

سيدنا نوح عليهم السلام نبي مسلم

எங்கள் தலைவர் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு முஸ்லிமான நபியாவார்கள்.

سيدنا إبراهيم عليه السلام نبي مسلم

எங்கள் தலைவர் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு முஸ்லிமான நபியாவார்கள்.

سيدنا محمد عليه الصلاة والسلام نبي مسلم وهو آخر الأنبياء وأفضلهم

எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் ஒரு முஸ்லிமான நபியாவார்கள். அவர்கள் நபிமார்களில் இறுதியானவரும் அவர்களில் மிகச்சிறந்தவரும் ஆவார்கள்.

أنا أحب الأنبياء كلهم

நான் அனைத்து நபிமார்களையும் நேசிக்கின்றேன்.

أسئلة - கேள்விகள்

من هو أول الأنبياء ؟

நபிமார்களில் முதன்மையானவர் யார் ?

من هو آخر الأنبياء ؟

நபிமார்களில் இறுதியானவர் யார் ?

الدرس 14

பாடம் : 14

## أمثلة لبعض الفاظ الكفر

## குப்ரான சில வார்த்தைகளுக்குரிய உதாரணங்கள்

குப்ர் என்பது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடக்கூடியது

من سب الله تعالى يخرج من الإسلام

யார் அல்லாஹ்வை ஏசுகின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறார்.

من سب نبيا من الأنبياء يخرج من الإسلام

யார் நபிமார்களில் ஒரு நபியை ஏசுகின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறார்.

من سب دين الإسلام يخرج من الإسلام

யார் இஸ்லாம் மார்க்கத்தை ஏசுகின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறார்.

من استهزأ بدين الإسلام يخرج من الإسلام

யார் இஸ்லாம் மார்க்கத்தை ஏளனம் (பரிகாசம்) செய்கின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிடுகிறார்.

من كفر لا بد أن يتشهد حتى يعود إلى الإسلا م

யார் இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிடுகிறாரோ அவர் இஸ்லாத்தில் நுழைவதற்கு இரு ஷஹாதஹ் கலிமஹ்வின் பொருளை உள்ளத்தால் உறுதி கொண்டு நாவினால் மொழிவது அவசியமாகும்.

والتشهد أن يقول (( أشهد أن لا إله الله وأ شهد أن محمدا رسول الله ))

ஷஹாதஹ் கலிமஹ் என்பது : أشهد أن لا إله إلا الله وأن محمدا رسول الله என்று கூறுவதாகும்.

الدرس 15

பாடம் : 15

## أبيات في العقيدة

## இஸ்லாமிய கோட்பாட்டை பிரதிபலிக்கக்கூடிய சில கவிவரிகள்

وصانع العالم لا يحويه        قطر (1) تعالى الله عن تشبيه

அகிலத்தாரைப் படைத்த அல்லாஹ்வை எந்தவொரு திசையும் சூழ்ந்து கொள்ளமாட்டாது. ஏனெனில்,

அவன் படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் பரிசுத்தமானவன்.

قد كان موجود ا ولا مكان        وحكمه الآن على ما كان

நிச்சயமாக அல்லாஹ் இடங்களை படைக்கும் முன்பே இடமின்றி உள்ளவன்.

அவன் அவற்றை படைத்த பின்பும் இடமின்றியே உள்ளான்.

سبحانه جل عن المكان        وعز عن تغير الزمان

படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் அல்லாஹ்வை தூய்மைப் படுத்துகிறேன்.

ஆவன் இடங்களை விட்டும் இன்னும் காலங்களுக்கு ஏற்றவாறு நிலைமாறுவதை விட்டும் பரிசுத்தமானவன்.

فقد غلا وزاد في الغلو        من خصه بجهة العلو

யார் அல்லாஹ் மேல் திசையில் குடியிருப்பவன் என்று கூறுவார்களோ நிச்சயமாக அவரகள் வரம்பு மீறிவிட்டனர். அதாவது இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விட்டனர்.

وحصر الصانع في السماء    مبدعها والعرش فوق الماء

மேலும் வானத்தையும், தண்ணீருக்கு மேல் அர்ஷையும் படைத்த அல்லாஹ்வை வானத்தில் மட்டிட்டவர்களும் திடனாக எல்லை மீறி இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விட்டனர்.

وأثبتوا لذاته التحيزا    قد ضل ذو التشبيه فيما جوزا

மேலும் அல்லாஹ்வின் யதார்த்தத்திற்கு இடம் எடுத்துக்கொள்ளும் தன்மையை தரிபடுத்தியவர்களும் திடனாக எல்லை மீறி இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிட்டனர். புடைப்புகளின் தன்மையை அல்லாஹ்வுக்கு தரிபடுத்தியவர்களும் நிச்சயமாக வழிதவறிவிட்டனர்.

هذه أبيات من العقيدة الصلاحية التي قدمها العالم محمد بن هبةالله البرمكي للسلطان صلاح الدين الأيوبي فأقبل عليها وأمر بتعليمها حتى للصبيان في الكتاب لما فيها من الفوائد العظيمة

(1)القطر معناه الجهة  أن الله منزه عن الجهات كلها

அஹ்லுஸ்ஸுன்னஹ் வல்ஜமாஅத்தினருடைய அடிப்படைக் கொள்கை விளக்கங்களை உள்ளடக்கிய இக்கவிதைகளை முஹம்மத் இப்னு ஹிபதுல்லாஹ் அல்-பர்மகீ என்ற ஒரு ஆலிம் கோர்வை செய்து சுல்தான் ஸலாஹுத்தீன் அல்-அய்யூபீ ரழியல்லாஹு அன்ஹுமா அன்னவருக்கு அன்பளிப்புச் செய்தார். இக் கவிதைகளை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் கற்றுக்கொடுக்கும் படி சுல்தான் ஸலாஹுத்தீன் அல்-அய்யூபீ அவர்கள் கட்டளையிட்டார்.

# فصل العبادات

# வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்

الدرس : 1

பாடம் : 1

## فروض الوضوء

## வுழூவின் கடமைகள்

فروض الوضوء ستة أشياء وهي :

வுழூவின் கடமைகள் ஆறு. ஆவையாவன :-

1. النية عند غسل الوجه

1. முகத்தை கழுவுகின்ற சந்தர்ப்பத்தில் உள்ளத்தால் வுழூவின் கடமைகளை நிறைவேற்றுகின்றேன் என்று நினைத்தல்.

2. وغسل الوجه كله

2. முகத்தை பரிபூரணமாக கழுவுதல்.

3 وغسل اليدين مع المرفقين

3. இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்.

4 ومسح بعض الرأس

4. தலையின் சில பகுதியை நீரினால் தடவுதல்.

5 وغسل الرجلين مع الكعبين

5. இரு கால்களையும் இரு கரண்டைக்கால் உட்பட கழுவுதல்.

6 وترتيب هذه الأمور هكذا

6. மேற் கூறப்பட்டவற்றை ஒழுங்கு முறைப்படி செய்தல்.

دعاء

اللهم اجعلني من التوابين واجعلني من المتطهرين

الدرس :2

பாடம் : 2

## نواقض الوضوء
## வுழூவை முறிக்கும் காரியங்கள்

ينقض الوضوء ويبطله أمور منها

வுழூவை முறிக்கும் காரியங்கள் சில.

خروج البول أوالغائط أوالريح

மலம் அல்லது சலம் அல்லது காற்று வெளியேறுதல்.

والنوم على الجنب أو الظهر أوالبطن

மேலும் தோல் புயத்தின் மீது அல்லது முதுகின் மீது அல்லது வயிற்றின் மீது தூங்குதல். (அதாவது சாய்ந்து அல்லது மல்லாந்து அல்லது முகங்குப்பற தூங்குதல்.)

فمن كان متوضئا وحصل منه هذا ليس له أن يصلي حتى يتوضأ من جديد

யாராவது வுழூவுடன் இருந்து மேற் கூறப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்று அவருக்கு நிகழுமேயானால் அவ்வுழூவை புதிதாக செய்யும் வரை தொழ முடியாது.

ذكر

يقال بعد الخروج من الخلاء

மலசல கூடத்தை விட்டு வெளியேறும் போது ஓதும் துஆ

الحمد لله الذي أذهب عني الأذى وعافاني

الدرس : 3

பாடம் : 3

## الصلوات الخمس
## ஐங்காலத் தொழுகைகள்

1. صلاة الصبح وهي أربع ركعات

1. ஸுப்ஹ் தொழுகை இரு ரக்அத்துக்களை கொண்டதாகும்.

2. صلاة الظهر وهي أربع ركعات

2. ழுஹ்ர் தொழுகை நான்கு ரக்அத்துக்களை கொண்டதாகும்

3. صلاة العصر وهي أربع ركعات

3. அஸ்ர் தொழுகை நான்கு ரக்அத்துக்களை கொண்டதாகும்.

4. صلاة المغرب وهي ثلاث ركعات

4. ம.்.ரிப் தொழுகை மூன்று ரக்அத்துக்களை கொண்டதாகும்.

5. صلاة العشاء وهي أربع ركعات

5. இஷா தொழுகை நான்கு ரக்அத்துக்களை கொண்டதாகும்.

قال رسول الله ﷺ

"خمس صلوات كتبهن الله على العباد"
رواه الإمام أحمد

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :**

**"அல்லாஹ் அடியார்களுக்கு ஐந்து நேர தொழுகையை கடமையாக்கியுள்ளான். "**

**(அறிவித்தவர் : இமாம் அஹ்மத் )**

دعاء
اللهم اجعلني من الذين يقيمون الصلاة

الدرس 4

பாடம் : 4

## من أدعية الصلاة

## தொழுகையில் ஓதப்படக்கூடிய துஆக்கள் சில

دعاء الإفتتاح

அரம்பத்தில் ஓதும் துஆ

( வஜ்ஜகத் )

وجهت وجهي للذي فطر السموات والأرض حنيفا مسلما وما أنا من المشركين
إن صلاتي ونسكي ومحياي ومماتي لله رب العالمين
لاشريك له وبذالك أمرت وأنا من المسلمين

الدرس : 5

பாடம் : 5

## التشهد الأخير

## இறுதி தஷஹ்ஹுத்

التحيات المباكات الصلوات الطيبات لله
السلام عليك أيها النبي ورحمة الله وبركاته السلام
علينا وعلى عباد الله الصالحين
أشهد أن لا إله إلا الله
وأشهد أن محمدا رسول الله

للحفظ غيبا

மனனம் இடுவதற்காக

أعوذ بكلمات الله التامات من شر ما خلق

الدرس : 6

பாடம் : 6

## الصلاة الإبراهيمية
## ஸலாதுல் இப்ராஹீமிய்யஹ்

اللهم صل على محمد وعلى ءال محمد
كما صليت على إبراهيم وعلى ءال إبراهيم
إنك حميد مجيد
اللهم بارك على محمد وعلى ءال محمد
كما باركت على إبراهيم
وعلى ءال إبراهيم إنك حميد مجيد

دعاء
اللهم عافني في بدني
اللهم عافني في سمعي
اللهم عافني في بصري

الدرس : 7

பாடம் : 7

## من أدعية الصلاة

## தொழுகையில் ஓதப்படக்குடிய துஆக்கள் சில

مما يدعى به في ءاخر الصلاة

தொழுகையில் இறுதியில் ஓதப்படக்கூடய துஆ

ربنا ءاتنا في الدنيا حسنة وفي الآخرة حسنة وقنا عذاب النار
ربنا لا تزغ قلوبنا بعد إذ هديتنا
وهب لنا من لدنك رحمة إنك أنت الوهاب

دعاء

أصبحنا وأصبح الملك لله
والحمد لله رب العالمين

الدرس :8

பாடம் : 8

## كيف أصلي الصبح

## நான் ஸுப்ஹ் தொழுகையை எவ்வாறு தொழுவேன் ?

أقف مستقبلا القبلة الشريفة وأقول بقلبي
(( أصلي فرض الصبح ))

சங்கையான கிப்லாவை முன்னோக்கியவனாக எனது உள்ளத்தால் **“உஸல்லீ பர்ழஸ் ஸுப்ஹி”** (பர்ளான ஸுப்ஹ் தொழுகையை தொழுகின்றேன்) என்று கூறுவேன்.

وأرفع اليدي إلى محاذات الأذنين
(( الله أكبر ))

பின்பு எனது இரண்டு கைகளையும் இரு காதுச்சோனைகளுக்கு நேராக உயர்த்தியவனாக **“ அல்லாஹு அக்பர் ”** என்று கூறுவேன்.

ثم أقرأدعاء الإفتتاح

பின்பு ஆரம்ப துஅவை (வஜ்ஜஹ்துவை) ஓதுவேன்.

ثم أقرأ الفاتحة وشيئا من القرآن ولو سورة قصيرة جهرا

பின்பு பாதிஹா சூறாவையும் அல்-குர்ஆனில் இருந்து ஒரு சிறிய சூறாவையும் பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதுவேன்.

ثم أركع وأقول
((سبحان ربي العظيم)) (( ثلاث مرات ))

பின்பு ருகூஉ செய்து **“ஸுப்ஹான றப்பியல் அழீம்”** என்று மூன்று விடுத்தம் கூறுவேன்.

ثم أرفع من الركوع قائلا
((سمع الله لمن حمده))

பின்பு **“ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்”** என்று கூறியவனாக ருகூஉ விலிருந்து உயர்வேன்.

فاذا اعتدلت اقول
((ربنا ولك الحمد ))

நிலைக்கு வந்து **“ரப்பனா வலகல் ஹம்து”** என்று கூறுவேன்.

ثم أسجد وأقول
(( سبحان ربي الأعلى)) (( ثلاث مرات))

பின்பு ஸுஜூத் செய்து **“ஸுப்ஹான ரப்பியல் அஃலா”** என்று மூன்று விடுத்தம் கூறுவேன்.

ثم أجلس وأقول
(( اللهم اغفرلي وارحمني واهدني))

பின்பு உட்கார்ந்து **“அல்லாஹும்மஃபிர் லீ வர்ஹம்னீ வஹ்தினீ”** என்று கூறுவேன்

ثم أسجد مرة ثانية وأقول
((سبحان ربي الأعلى)) (( ثلاث مرات))

மேலும், இரண்டாவது தடவை ஸுஜூத் செய்து **“ஸுப்ஹான ரப்பியல் அஃலா”** என்று மூன்று விடுத்தம் கூறுவேன்.

ثم أقوم للركعة الثانية وأفعل كما فعلت في الركعة الأولى من الفاتحة إلى السجود الثاني

பின்பு இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து நின்று முதலாவது ரக்அத்தில் பாதிஹா சூறாவிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரைக்கும் செய்ததைப் போன்று செய்வேன்.

ثم أجلس وأقرأ التشهد والصلاة الإبراهيمية والدعاء ءاخر الصلاة

பின்பு உட்கார்ந்து அத்தஹிய்யாத்தையும் ஸலாதுல் இப்றாஹீமிய்யாஹ்வையும் தொழுகையின் இறுதி துஅவையும் ஓதுவேன்.

ثم ألتفت إلى اليمين وأسلم قائلا
(( السلام عليكم ورحمة الله))

பின்பு வலது பக்கமாக திரும்பி **"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்"** என்று கூறியவனாக ஸலாம் கொடுப்பேன்.

ثم ألتفت إلى اليسار قائلا
(( السلام عليكم ورحمة الله))

பின்பு இடது பக்கமாக திரும்பி **"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்"** என்று கூறியவனாக ஸலாம் கொடுப்பேன்.

دعاء

أصبحنا وأصبح الملك لله
والحمد لله رب العالمين

الدرس : 9

பாடம் : 9

## كيف أصلي الظهر

## ழுஹ்ர் தொழுகையை நான் எவ்வாறு தொழுவேன் ?

أقف مستقبلا القبلة الشريفة وأقول بقلبي (( أصلي فرض الظهر ))

சங்கையான கிப்லாவை முன்னோக்கியவனாக எனது உள்ளத்தால் **"உஸல்லீ பர்ழல் ழுஹ்ரி"** (பர்ழான ளுஹ்ர் தொழுகையை தொழுகின்றேன்) என்று கூறுவேன்.

وأرفع يدي قائلا ((الله أكبر ))

பின்பு எனது இரண்டு கைகளையும் உயர்த்தியவனாக **"அல்லாஹு அக்பர்"** என்று கூறுவேன்.

ثم أقرأ دعاء الإفتتاح

பின்பு ஆரம்ப துஅவை ( வஜ்ஜஹ்துவை ) ஓதுவேன்.

ثم أقرأ الفاتحة وشيئا من القرآن ولو سورة قصيرة سرا

பின்பு பாதிஹா சூறாவையும் அல்-குர்ஆனில் இருந்து வேறொரு சிறிய சூறாவையும் தனக்கு கேட்கும் விதத்தில் ஓதுவேன்.

ثم أركع وأقول(( سبحان ربي العظيم)) (( ثلاث مرات))

பின்பு ருகூஉ செய்து **"ஸுப்ஹான றப்பியல் அழீம்"** என்று மூன்று தடவைகள் கூறுவேன்.

ثم أرفع من الركوع قائلا (( سمع الله لمن حمده ))

பின்பு **"ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்"** என்று கூறியவனாக ருகூஉ விலிருந்து உயர்வேன்.

فإذا اعتدلت قلت

((ربنا ولك الحمد ))

நிலைக்கு வந்து **"ரப்பனா வலகல் ஹம்து"** என்று கூறுவேன்.

ثم أسجد وأقول ((سبحان ربي الأعلى)) (( ثلاث مرات ))

பின்பு ஸுஜுத் செய்து **"ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா"** என்று மூன்று விடுத்தம் கூறுவேன்

ثم أجلس ثم أسجد مرة ثانية وأقول ((سبحان ربي الأعلى)) (( ثلاث مرات ))

பின்பு உட்கார்ந்து இரண்டாவது ஸுஜுத் செய்து **"ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா"** என்று மூன்று விடுத்தம் கூறுவேன்.

ثم أقوم للركعة الثانية

பின்பு இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து நிற்பேன்.

فأفعل كما فعلت في الركعة الأولى من الفاتحة إلى السجود الثاني

அதில் முதலாவது ரக்அத்தில் பாதிஹா சூறாவிலிருந்து இரண்டாவது ஸுஜுத் வரைக்கும் எவ்வாறு செய்தேனோ அதே போன்று செய்வேன்.

ثم أقرأ التشهد ثم أقول : (( اللهم صل على محمد ))

பின்பு தஷஹ்ஹுதை ஓதுவேன் பின்பு **"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்"** என்று கூறுவேன்.

ثم أقوم للركعة الثالثة فأقرأ الفاتحة

பின்பு இரண்டாவது ரக்அத்துக்காக எழுந்து பாதிஹா சூறாவை ஓதுவேன்.

ثم أفعل كما فعلت في الركعة الأولى من الركوع إلى السجود الثاني

பின்பு அதிலே முதலாவது ரக்அத்தில் பாதிஹா சூறாவிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரைக்கும் எவ்வாறு செய்தேனோ அதே போன்று செய்வேன்.

ثم أقوم للركعة الرابعة فأفعل كما فعلت في الثالثة من قراءة الفاتحة إلى السجود الثاني

பின்பு நான்காவது ரக்அத்துக்காக எழுந்து இரண்டாவது ரக்அத்தில் பாதிஹா சூறாவிலிருந்து இரண்டாவது ஸுஜூத் வரைக்கும் எவ்வாறு செய்தேனோ அதே போன்று செய்வேன்.

ثم أقرا التشهد والصلاة الإبراهيمية والدعاء ءاخر الصلاة

பின்பு அத்தஹிய்யாத்தையும் ஸலாதுல் இப்றாஹீமிய்யஹ்வையும் தொழுகையின் இறுதி துஅவையும் ஓதுவேன்.

ثم أنهي صلاتي قائلا السلام عليكم ورحمة الله مرتين مرة ألتفت فيها إلى اليمين ومرة ألتفت إلى اليسار

பின்பு எனது தொழுகையை **“அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்”** என்று இரு தடவைகள் கூறியவனாக அதில் ஒரு விடுத்தம் வலது பக்கமும் மறு விடுத்தம் இடது பக்கமும் ஸலாம் கூறி முடித்து கொள்வேன்.

الدرس 10

பாடம் : 10

## كيف أصلي العصر
## நான் எவ்வாறு அஸ்ர் தொழுகையை தொழுவேன் ?

أصلي صلاة العصر كصلاة الظهرتماما
لكن أقول عند النية ((أصلي فرض العصر ))

நான் அஸ்ர் தொழுகையை ழுஹ்ர் தொழுகையைப் போன்று பரிபூரணமாக தொழுவேன் என்றாலும் நிய்யத் வைக்கின்ற சந்தர்ப்பத்தில **“உஸல்லீ பர்ழல் அஸ்ரி”** (பர்ழான அஸ்ர் தொழுகையை தொழுகின்றேன்) என்று கூறுவேன்.

دعاء

اللهم أعني على ذكرك وشكرك وحسن عبادتك

الدرس : 11

பாடம் : 11

## كيف أصلي المغرب

## நான் எவ்வாறு ம.ஃ.ரிப் தொழுகையை தொழுவேன் ?

أقف مستقبلا القبلة الشريفة
وأقول بقلبي (( أصلي فرض المغرب ))

சங்கையான கிப்லாவை முன்னோக்கியவனாக எனது உள்ளத்தால் **“உஸல்லீ பர்ழல் ம.ஃ.ரிபி”** (பர்ழான ம.ஃ.ரிப் தொழுகையை தொழுகின்றேன்) என்று கூறுவேன்.

وأرفع يدي قائلا (( الله أكبر ))

பின்பு எனது இரண்டு கைகளையும் உயர்த்தியவனாக **“அல்லாஹு அக்பர்”** என்று கூறுவேன்.

ثم أفعل في الركعة الأولى والثانية
كما فعلت في صلاة الصبح

பின்பு முதலாவது ரக்அத்திலும் இரண்டாவது ரக்அத்திலும் ஸுப்ஹ் தொழுகையில் செய்ததைப் போன்று செய்வேன்.

– أقرأ الفاتحة والسورة القصيرة جهرا في الركعة الأولى والثانية

முதலாவது ரக்அத்திலும் இரண்டாவது ரக்அத்திலும் பாதிஹா சூறாவையும் மற்றுமொரு சூறாவையும் பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதுவேன்.

ثم أجلس وأقرأ التشهد

பின்பு உக்கார்ந்து தஷஹ்ஹுதை ஓதுவேன்.

ثم أقول (( اللهم صل على محمد ))

பின்பு **“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்”** என்று கூறுவேன்.

ثم أكبر وأقوم للركعة الثالثة فأفعل فيها
كما فعلت في غيرها من الركعات
لكن لا  أقرأ غير الفاتحة سرا في القيام

பின்பு மூன்றாவது ரக்அத்துக்காக எழுந்து தக்பீர் கூறி ஏனைய ரக்அத்துக்களில் செய்ததைப் போன்று செய்வேன். ஆனால் நிலையிலே பாதிஹா சூறாவை தவிர வேறு எந்த சூறாவையும் ஓத மாட்டேன்.

ثم بعد السجود الثاني
أجلس وأقرأ التشهد ثم الصلاة الإبراهيمية ودعاء ءاخر الصلاة

பின்பு இரண்டாவது ஸுஜூத் செய்த பிறகு உட்கார்ந்து அத்தஹிய்யாத்தையும் ஸலாதுல் இப்றாஹீமிய்யாவையும் தொழுகையின் இறுதி துஅவையும் ஓதுவேன்.

ثم أنهي صلاتي قائلا
(( السلام عليكم ورحمة الله ))   (( مرتين ))

பின்பு **“அஸ்ஸலாமு அலைக்கும்”** என்று இரு தடவைகள் கூறியவனாக எனது தொழுகையை முடித்துக் கொள்வேன்.

مرة ألتفت فيها إلى اليمين ومرة ألتفت فيها إلى اليسار

முதலாவது ஸலாமை வலது பக்கம் திரும்பியும் இரண்டாவது ஸலாமை இடது பக்கம் திரும்பியும் கூறுவேன்.

الدرس 12

பாடம் : 12

## كيف أصلي العشاء

## நான் இஷா தொழுகையை எவ்வாறு தொழுவேன் ?

أصلي صلاة العشاء كصلاة الظهر

நான் இஷா தொழுகையை ழுஹ்ர் தொழுகையைப் போன்று தொழுவேன்.

لكن أقول في النية
(( أصلي فرض العشاء ))

ஆனால் நிய்யத் வைக்கும் சந்தர்ப்பத்தில் உள்ளத்தால் **"உஸல்லீ பர்ழல் இஷாயி"** (பர்ழான இஷா தொழுகையை தொழுகின்றேன்) என்று கூறுவேன்.

وأقرأ الفاتحة والسورة بعدها في الركعة الأولى والثانية جهرا

முதலாவது ரக்அத்திலும் இரண்டாவது ரக்அத்திலும் பாதிஹா சூறாவையும் மற்றுமொரு சூறாவையும் பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதுவேன்.

وأقرأ الفاتحة في الركعة الثالثة والرابعة سرا

மூன்றாவது ரக்அத்திலும் நான்காவது ரக்அத்திலும் பாதிஹா சூறாவை தனக்கு கேட்கும் விதத்தில் ஓதுவேன்.

دعاء

اللهم اجعل أول هذا النهار صلاحا وأوسطه نجاحا
ءاخره فلاحا يا ارحم الراحمين

# فصل
# الأخلاق الإسلامية

# இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்

الدرس 1

பாடம் : 1

## من صفات المسلم الصالح

## ஸாலிஹான முஸ்லிமின் பண்புகள்

المسلم الصالح يقرأ القرآن

ஸாலிஹான ஒரு முஸ்லிம் அல்-குர்ஆனை ஓதுவார்.

المسلم الصالح يحب والديه المؤمنين ويحترمهما

ஸாலிஹான முஸ்லிம் தனது மு.ஃ.மினான தாய் தந்தையினரை நேசிப்பதோடு அவர்களை சங்கையும் செய்வார்.

المسلم الصالح يحسن إلى من أساء إليه كما يحسن إلى من أحسن إليه

ஸாலிஹான முஸ்லிம் தனக்கு உபகாரம் செய்தவர்களுக்கு உபகாரம் செய்வது போல் தனக்கு தீங்கிழைத்தவனுக்கும் உபகாரம் செய்வார்.

المسلم الصالح يساعد الفقراء والأيتام

ஸாலிஹான முஸ்லிம் ஏழை எளியோர்களுக்கும், அநாதைகளுக்கும் உதவிசெய்வார்.

المسلم الصالح يكرم ضيفه يعامل جاره بالإحسان

ஸாலிஹான முஸ்லிம் தனது விருந்தாளிகளை உபசரிப்பார். அவரது அயல் வீட்டாருடன் நன்நடத்தையுடன் நடந்து கொள்வார்.

المسلم الصالح لا يسرق

ஸாலிஹான முஸ்லிம் திருடமாட்டார்.

المسلم الصالح لا يضرب مسلما بغير حق

ஸாலிஹான முஸ்லிம் இன்னோரு முஸ்லிமுக்கு எந்தவொரு மார்க்க அனுமதியுமின்றி அடிக்கமாட்டார்.

المسلم الصالح لا يؤذي مسلما بغير حق

ஸாலிஹான முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு எந்தவொரு மார்க்க அனுமதியுமின்றி நோவினை செய்யமாட்டார்.

المسلم الصالح لا يشرب الخمر

ஸாலிஹான முஸ்லிம் மதுபானம் அருந்தமாட்டார்.

المسلم الصالح لا يتعاطى المخدرات الضارة

ஸாலிஹான முஸ்லிம் தீங்கிழைக்கக்கூடிய போதை பொருட்களை உபயோகிக்கமாட்டார்.

الدرس 2

பாடம் : 2

## ءاداب إسلامية
## இஸ்லாம் கற்பித்த ஒழுங்குகள்

عندما أستيقظ في الصباح أقول :

நான் காலையில் எழுந்தவுடன் பின்வரும் துஆவை ஓதுவேன்.

(( أصبحنا وأصبح الملك لله والحمد لله رب العالمين ))

“நாங்கள் காலையை அடைந்தோம் ஆட்சி அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தமானதாகும். அகிலத்தாரை படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்”

عند المساء أقول:

மாலையை அடைந்ததும் நான் கூறுவேன்.

((أمسينا وأمسى الملك لله والحمد لله رب العالمين ))

“நாங்கள் மாலையை அடைந்தோம் ஆட்சி அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தமானதாகும். அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்”

قبل البدء بالأكل والشرب :

உண்ணப் பருக ஆரம்பிக்க முன் நான் கூறுவேன்.

(( بسم الله ))

அல்லாஹ்வின் திருநாமம் கூறி நான் சாப்பிட மற்றும் பருக ஆரம்பிக்கின்றேன்

وبعد الأنتهاء من الأكل والشرب أقول :

சாப்பிட்டு அல்லது பருகி முடித்த பின்னர் நான் பின்வருமாறு கூறுவேன்.

(( الحمد لله الذي أطعم وسقى وسوغه وجعل له مخرجا ))

உணவளித்த, நீர் புகட்டிய, அவைகளை எளிதாக விழுங்கவைத்த அது வெளியேற ஏற்பாடும் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

الدرس 3

பாடம் : 3

## طاعة الوالدين

## பெற்றோருக்கு வழிப்படுதல்

قال الله تعالى

(( وبالوالدين إحسانا ))

سورة البقرة : ءاية : 83

**படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய்மையான அல்லாஹ் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு கட்டளையிட்டுள்ளான்.”**

**( அத்தியாயம் : அல்-பகரஹ் வசனம் : 83 )**

وقال تعالى

((فلا تقل لهما أف ولا تنهرهما وقل لهما قولا كريما ))

سورة الإسراء ' ءاية 23

**படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய்மையான அல்லாஹ் கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ அவர்களை நோக்கி ‘உ.்.ப்’ ( சீ ) எனக் கூறவோ, அவ்விருவரையும் விரட்டவோ வேண்டாம். அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக!”**

**( அத்தியாயம் : அல்-இஸ்ராஉ வசனம் : 23 )**

المسلم الصالح يعامل والديه المؤمنين بأدب واحترام

ஸாலிஹான முஸ்லிம் அவனது மு.ஃ.மினான பெற்றோருடன் ஒழுக்கமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்வார்.

المسلم الصالح لا يرفع صوته في وجه أمه وأبيه بلا حق

ஸாலிஹான முஸ்லிம் அவரது தாய் தந்தையின் முன்னிலையில் மார்க்க அனுமதியின்றி அவரது சத்தத்தை உயர்த்த மாட்டார்.

المسلم الصالح لا يكذب

ஸாலிஹான முஸ்லிம் பொய் பேசமாட்டார்.

دعاء

رب اغفر لي ولوالدي رب ارحمهما كما ربياني صغيرا

الدرس 4

பாடம் : 4

**حسن المعاملة**

**நன் நடத்தை**

المسلم يحب المسلمين

ஒரு முஸ்லிம் பிற முஸ்லிம்களை நேசிப்பார்.

المسلم يقول لأخيه المسلم حين يلقاه :

ஒரு முஸ்லிம் தன் பிற முஸ்லிமான சகோதரனைச் சந்திக்கும் போது "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறுவார்.

فيرد عليه

அதை கேட்டவர் "வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹ் வபரகாதுகு" என்று அவருக்கு பதிலளிப்பார்.

المسلم يعامل المسلمين بلطف وأدب

ஒரு முஸ்லிமான சகோதரர் மற்ற முஸ்லிம்களுடன் மென்மையாகவும் ஒழுக்கமாகவும் நடந்து கொள்வார்.

المسلم يقول لأخيه المسلم إذا أحسن إليه :

ஒரு முஸ்லிம் தனக்கு உபகாரம் செய்த ஒரு முஸ்லிமுக்கு பின் வருமாறு கூறுவார்.

(( بارك الله فيك ))

அல்லது

أو : (( أحسن الله إليك ))

அல்லது

أو (( جزاك الله خيرا ))

أو نحو ذلك

அல்லது அது போன்ற துஆக்களின் மூலம் அவருக்குப் பிரார்த்தனை செய்வார்.

الدرس 5

பாடம் : 5

## فضيلة المساجد

## பள்ளிவாயல்களின் சிறப்பு

قال رسول الله ﷺ :

"خير بقاع الأرض المساجد"

( رواه مسلم )

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் :

அவர்கள் கூறினார்கள். :

**"பூமியில் மிகச் சிறந்த இடம் பள்ளிவாயல்களாகும்"**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்)**

المطلوب من المسلمين أن يصلوا في المساجد الصلوات الخمس إذا استطاعوا

முஸ்லிம்கள் பள்ளிவாயல் சென்று தொழுகையை நிறைவேற்றுவதற்கு சக்தி பெற்றவர்களாக இருப்பின் ஐவேளைத் தொழுகைகளைப் பள்ளிவாயல்களில் நிறைவேற்றுவது அவர்களிடம் வேண்டப்படுகின்றது.

المسلمون يتعارفون في المساجد فيحب بعضهم بعضا

முஸ்லிம்கள் பள்ளிவாயல்களில் ஒருவருக்கு ஒருவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவர்களில் சிலர் சிலருடன் அன்பாகவும் நடந்து கொள்வார்கள்.

المساجد يحبها الله تعالى وكذالك يحبها الأنبياء والصالحون

பள்ளிவாயல்கள் என்பன : அல்லாஹ்வும், நபிமார்களும் இன்னும் நல்லடியார்களும் பொருந்திக்கொண்ட இடமாகும்.